1975 அக்டோபர் 27]

* 70 வினா—திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் நகரிலுள்ள அரசினர் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) மேட்டுப் பாளையம் அரசு மருத்துவ மனையில் முன்னாள் இராணுவத்தினருக்காக 12 படுக்கைகள் கொண்ட ஒரு தனிப்பகுதி (இராணுவத்தினர் நிவாரண நிதியிலிருந்தும் அரசு நிதியிலிருந்தும்) கட்ட 1975-76 ஆம் ஆண்டிற்கான திட்டப் பணியாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் தனியார் மூலம் பிரசவ அறை ஒன்று நன்கொடையாகக் கட்டி அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது.

* 71 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is a proposal under the consideration of the Government to put up additional building for the hospital at Denkanikotta in Dharmapuri district, and also to provide a maternity ward; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) இதுபற்றி நலத்துறை இயக்குநருடைய பரிசீலனையில் ஒரு ஆலோசனை ஏற்கெனவே இருந்து வருகிறது.

கதிர்வீச்சு மருத்துவப் பயிற்சி

* 72 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972–73, 1973–74 ஆம் ஆண்டுகளில் சென்னை அரசினர் பொது மருத்துவ மனையிலும், மதுரை அரசினர் பொது மருத்துவ மனையிலும் எக்ஸ்ரே டிபார்ட்மெண்டில் (Certified Radiological Assistant) பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை எவ்வளவு, ஆண்டுவாரியாக?

(இ) சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் பணி புரியும் அனுபவமுடைய இருட்டறை உதவியாளர்கள் இப் பயிற்சிக்கு அனுப்பப்படுவதில்லை என்பது உண்மையா?

(உ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) சென்னை அரசினர் பொது மருத்துவ மனையிலும், மதுரை எர்ஸ்கின் பொது மருத்துவ மனையிலும் எக்ஸ்ட்ரே டிபார்ட்மெண்டில் C.R.A. பயிற்சி நடத்தப்படுவதில்லை. எனினும் அது சென்னை மருத்துவக் கல்லூரியிலும் மதுரை மருத்துவக் கல்லூரியிலும் நடைபெறுகிறது. பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை விவரம்:—

	1972-73.	1973-74.
சென்னை மருத்துவக் கல்லூரி	17	20
மதுரை மருத்துவக் கல்லூரி	17	20

(இ) ஆம்.

(உ) பயிற்சிக்கு அனுப்பப்படும் இருட்டறை உதவியாளர் களின் இடங்களுக்கு பதிலாள்-பயிற்சி பெற்றவர்கள்-இல்லாத தினுல், தேவையின் காரணமாக அவர்களைப் பயிற்சிக்கு அனுப்ப வில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : உதவி மானியத்தில் கூட மதுரை ஆஸ்பத்திரி எக்ஸ்-ரே டிபார்ட்மென்ட் சம்பந்தமாக சில விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்கும் போது, ஏற்கெனவே பயிற்சி பெற்றவர்களுக்கு இந்த டார்க் ரூம் அஸிஸ்டென்ட் வேலை செய்யக்கூடிய வசதிகளைச் செய்து கொடுக்க இனிமேலாவது அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 'டார்க் ரூம் அஸிஸ் டென்ட்' என்ற பணியில் உள்ளவர்கள் அந்தப் பணியிலிருந்து வேறு பயிற்சிக்கு அனுப்பப்படுகிறபோது அந்தப் பணியைச் செய்வதற்கு உரிய தகுதி பெற்றவர்கள் இல்லாததன் காரணமாக இதுவரை அனுப்பப்படவில்லை. அதற்குப் பதிலாக ஆட்கள் தேவையான அளவுக்கு நியமிக்கப்படுவதற்கு மருத்துவக் கல்வி இயக்குநர் ஒரு சிபார்சு செய்துள்ளார். அது எந்த அளவுக்கு முடிகிறதோ அந்த அளவுக்கு அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப் படும்.

1975 அக்டோபர் 27]

திரு. ஜே. ஜேம்ஸ் : டார்க் ரூம் அஸிஸ்டென்ட் பயிற்சி பெற்ற பலர் இப்பொழுது வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் எங்கெங்கே தேவைப்படுகிறதோ அங்கே அவர்களை நியமிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தற்போது அந்த இடங்கள் காலியாக இருப்பதாகப் பொருள் அல்ல. அவர்கள் பயிற்சிக்குச் செல்கிற இடைக்காலத்தில்தான் அந்த நிலை ஏற்படும். அப்படி அவர்களைப் பயிற்சிக்கு எடுக்கும்போது தேவைக்கேற்ப மற்றவர்களை அந்தப் பணியில் ஈடுபடுத்தி அவர்களைப் பயிற்சிக்கு அனுப்பலாம்.

பாரதியார், ரவீந்திரர் நினைவு அரங்கு

* 66 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் கவிபாரதி, ரவீந்திரநாத் தாகூர், நினைவு அரங்கு கலாச்சார நிலையம் அமைத்திட தமிழ்நாடு அரசு நிலம் ஒதுக்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஒரு விவர அறிக்கை * சபையின்முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, ரவீந்திரநாத் தாகூர் நூற்றாண்டு விழாவையொட்டி 1961 ஆம் ஆண்டிலே மத்திய அரசு ரூ. 2.75 இலட்சம் மானியமாகத் தர முன்வந்து, அதற்காக 64 கிரௌண்டு நிலம் கூட மாநில அரசு ஒதுக்கியிருக்கிறது. பின்னர் முடியாத காரணத்தால், பாரதி நினைவுச் சங்கம் என்ற சங்கத்தினிடத்தில் ரவீந்திரநாத் தாகூர் அவர்களுடைய நினைவுச் சின்னத்தையும், பாரதியார் அவர்களுடைய நினைவுச் சின்னத்தையும் ஒன்றாகவே அமைத்துக்கொள்வதற்கேற்ற வகையில்

---

* 650-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.